Level ONE | முதல் நிலை

# 72 மனப்பாட வசனங்கள்

# 72 MEMORY VERSES





# வேத வசனங்களை ஏன் மனப்பாடம் செய்ய வேண்டும்?

Rev. J. கல்யாணகுமார்

## 1 இயேசு, வசனத்தை மனனம் செய்திருந்தார்

அநேக முறை, தனது வாழ்விலும் ஊழியத்திலும் வேத வசனத்தை இயேசு பயன்படுத்தினார். ஏறத்தாழ 180 முறை (பழைய ஏற்பாட்டின் 24 புத்தகங்களிலிருந்து) இயேசு வசனத்தை மேற்கோள் காட்டி சொன்னதாக சொல்லப்படுகிறது. பிசாசை ஜெயிப்பதற்கு வசனத்தை பயன்படுத்தினார்; பிறரின் சிந்தனையை சரிப்படுத்த வசனத்தை பயன்படுத்தினார்; நடந்த சம்பவங்கள், நடக்கும் சம்பவங்கள், நடக்கப் போகும் சம்பவங்கள் ஆகிய எல்லாவற்றிலும் விளக்கங்களை அளிக்க வசனத்தை பயன்படுத்தினார். மாத்திரமல்ல, வாழ்வின் சூழ்நிலைகளை புரிந்து கொள்ள வேத வசனங்களை மேற்கோள் காட்டினார். வேத வசனங்கள் எப்படி ஒரு புரிந்து கொள்ளுதலை தருகிறதென்பதற்கு, ஒரு சூழ்நிலையிலே ஆறுதலையும் வல்லமையையும் தருகிறதென்பதற்கும், இயேசு நமக்கு ஒரு முன்மாதிரி! தாவீதும் வசனத்தை மனப்பாடம் செய்தவராயிருந்தார் (சங்கீதம் 119:11).

## 2 நாமும் வசனத்தை மனனம் செய்ய அழைக்கப்பட்டிருக்கின்றோம்



**“கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக…”** என்று கொலோசெயர் 3:16-ல் வாசிக்கின்றோம். உபாகமம் 6:4-9 வசனங்களில்… **“இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது…”** என்றும், உன் பிள்ளைகளுக்கு போதி என்றும், போகும் இடங்களிலெல்லாம் அதைப்பற்றி பேசு என்றும், வாழ்வின் முக்கிய பகுதியாக வைத்துக் கொள் என்றும் சொல்லப்பட்டிருக்கும் ஆலோசனையை வாசிக்க முடியும். வசனத்தை அறிந்திராத பட்சத்தில் அதனை வாழ்வில் அப்பியாசப்படுத்தவோ, பிறருக்கு போதிக்கவோ இயலாது.

வசனத்தை அறிந்து கொள்ள நமக்கு கொடுக்கப்பட்டுள்ள கட்டளை பாரமான ஒன்றல்ல; அது, நமக்கு ஜீவனையும் புத்துயிரையும் தருகிறதாகவே உள்ளது!

## 3 வசனத்தை மனப்பாடம் செய்வதால், அதற்கு கீழ்ப்படிந்து வாழவும் சோதனையை ஜெயிக்கவும், வழிவகுக்கிறது

எபேசியர் 6:10-20 வசனங்களில் சொல்லப்பட்ட சர்வாயுதவர்க்கத்தில் தாக்குதலுக்குரிய ஒரு ஆயுதம் வேத வசனம் மட்டுமே (ஆவியின் பட்டயமாகிய வசனம்). மற்ற ஆயுதங்கள் யாவும் தற்பாதுகாப்பு ஆயுதங்களே!
பிசாசினால் இயேசு சோதிக்கப்பட்டபோது... வேத வசனங்களை கொண்டுதான் ஜெயித்தார் (மத்தேயு 4:1-11).
சோதனையை ஜெயிப்பதற்கும் பரிசுத்தமாக வாழ்வதற்கும் வேத வசனம் எவ்வளவு முக்கியம் என்பதனை சங்கீதம் 119:9,11 வசனங்களில் காண்கிறோம்!

## 4 வசனத்தை தியானிப்பதினாலும் மனப்பாடம் செய்வதினாலும்... வாழ்வில் ஆசீர்வாதம் உண்டாகும்

வேத வசனத்தை தியானிப்பதினால் உண்டாகும் வெற்றியையும் ஆசீர்வாதங்களையும் குறித்து சங்கீதம் 1 மற்றும் யோசுவா 1:8-ல் மிகத் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. வேத வசனங்களை உண்மையான வாஞ்சையுடன் தியானிக்கும்போது, அது நமது மனதில் நிரந்தரமாக தங்கிவிடும்! இதினால் உண்டாகும் சரீரப்பிரகாரமான நன்மைகளும், செல்வச் செழிப்புகளும் ஒரு பக்கம் இருந்தாலும்... இதினால் உண்டாகும் ஆவிக்குரிய வலிமையும், தெளிவான நம்பிக்கையும், நமது ஆத்தும நேசருடன் கிடைக்கும் தெய்வீக உறவும் மேலானவைகளே!

## 5 வசனத்தை நாம் மனனம் செய்வதினால், அதனைக் கொண்டு பிற விசுவாசிகளை ஊக்குவிக்க முடியும்

நம்பிக்கையையும் நன்மையையும் கொண்டு வரக்கூடிய ஆற்றல் வேத வசனத்திற்கு உள்ளது (ரோமர் 15:4).
இந்த வசனங்களைக் கொண்டு நாம் ஒருவரையொருவர் தேற்ற வேண்டும் என்று பவுல் சொல்லுகிறார் (1 தெசலோனிக்கேயர் 4:18). வசனங்கள் போதுமான அளவு நமது மனதில் இருக்கும் போது... இதனை நன்றாக நாம் செய்ய முடியும்!

## 6 வசனத்தை மனனம் செய்வதினால் தேவனையும் தேவ சித்தத்தையும் அறிந்து கொள்ள முடிகிறது

வேத வசனத்தை நாம் அறிய அறிய தேவனையும் தேவ சித்தத்தையும் நன்றாக அறிந்து கொள்ள முடியும். வேத வசனத்தை நாம் அறிந்து, அதற்குக் கீழ்ப்படியும்போது, தேவனோடு உள்ள நமது உறவு புதுப்பிக்கப்படுகின்றது. அதினால் நமது வாழ்வும் ஆசீர்வதிக்கப்படுகின்றது! ரோமர் 12:2 வசனத்தின்படி, வேத வசனத்தின் மூலம் நமது மனம் புதிதாக்கப்படும்போது... நாம் மறுரூபமாக்கப்படுவோம். மாத்திரமல்ல, தேவ சித்தத்தையும் அறிந்து கொள்வோம்!

# WHY WE SHOULD MEMORIZE SCRIPTURE VERSES

Rev. J. KALYANAKUMAR

## 1. JESUS MEMORIZED SCRIPTURE

Jesus quoted Scripture verses frequently. He quoted 24 Books of the Old Testament, almost 180 times in the New Testament. He quoted Scripture to counteract the lies and enticements of the devil; to answer a question; to correct wrong thinking, to explain why certain events did happen, are happening and will happen and to show the relevance of God's Word in a given circumstance. Jesus models for us how quoting Scripture brings understanding, comfort and power into a situation. David also memorized Scripture (Psalm 119:11)!

## 2. WE ARE CALLED TO MEMORIZE SCRIPTURE

Colossians 3:16 tells us to "let the Word of Christ dwell in you richly" (KJV). And Deuteronomy 6:4-9 tells us to bind God's law on our foreheads, teach it to our children, talk about it wherever we go, and make it an integral part of our lives. We must know Scripture first before we teach it or apply it as God desires. The command to know Scripture is not burdensome, but life-giving!

## 3. MEMORIZING SCRIPTURE HELPS US TO OVERCOME TEMPTATIONS AND LIVE IN OBEDIENCE

The armor of God in Ephesians 6:10-20 only mentions one offensive weapon: "the Sword of the Spirit, which is the Word of God".

When the devil tempted Jesus in the wilderness, Jesus used the Word of God to overcome (Matthew 4:1-11).
Psalm 119:9 & 11 also teach us how one can overcome temptation, using the Word of God and keeping himself/herself pure!

## 4. MEDITATING & MEMORIZING SCRIPTURE WILL BRING GOD'S BLESSING TO OUR LIVES

Psalm 1 & Joshua 1:8 very clearly highlights how the Meditation of God's Word can bring success and blessings in one's life!
True delight in the Scripture & constant Meditation of it, will more often than not, store the Scripture in our mind (memory)!
The blessing that comes out of this is not necessarily health, wealth, or prosperity, but greater spiritual vitality, profound hope, and greater communion with the Creator of the Universe and Lover of your soul!

## 5. MEMORIZING SCRIPTURE ALLOWS US TO MORE READILY ENCOURAGE BELIEVERS

One of Scripture's stated purpose, is to encourage and give us hope (Romans 15:4). For this reason, Paul exhorts in 1 Thessalonians 4:18 to be ready to encourage other believers with the truth. When we have verses and passages ready, we can more easily build up other believers in the truth.

## 6. MEMORIZING SCRIPTURE GIVES US A BETTER UNDERSTANDING OF GOD AND HIS WILL

The more we know the WORD, the more we will know God and HIS will.
When we know God's Word and obey it, we are able to experience God at a deeper level. Obedience to God's Word allows us to enjoy a great level of freedom and His Blessings!
Romans 12:2 says that it renews our mind and helps us understand His will.

**1 யோவான் 1:12**

அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்.

**2 ரோமர் 5:8**

நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்.

**3 ஏசாயா 58:11**

கர்த்தர் நித்தமும் உன்னை நடத்தி, மகா வறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி, உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார்; நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப்போலவும், வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய்.

**4 எரேமியா 17:7-8**

கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனி கொடுக்கிறதுமான மரத்தைப்போலிருப்பான்.

**5 ஏசாயா 45:4**

வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்து, அந்தகாரத்தில் இருக்கிற பொக்கிஷங்களையும், ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் உனக்குக் கொடுப்பேன்; நான் என் தாசனாகிய யாக்கோபினித்தமும், நான் தெரிந்து கொண்ட இஸ்ரவேலினிமித்தமும், நான் உன்னைப் பெயர்சொல்லி அழைத்து, நீ என்னை அறியாதிருந்தும், உனக்கு நாமம் தரித்தேன்.

## 6 எசேக்கியேல் 34:26

நான் அவர்களையும் என் மேட்டின் சுற்றுப்புறங்களையும் ஆசீர்வாதமாக்கி, ஏற்றகாலத்திலே மழையைப் பெய்யப்பண்ணுவேன்; ஆசீர்வாதமான மழை பெய்யும்.

## 7 சங்கீதம் 107:20

அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி, அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார்.

## 8 செப்பனியா 3:17

உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்; அவர் வல்லமையுள்ளவர், அவர் இரட்சிப்பார்; அவர் உன்பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து, தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார்; அவர் உன்பேரில் கெம்பீரமாய்க் களிகூருவார்.

## 9 2 இராஜாக்கள் 3:17

நீங்கள் காற்றையும் காணமாட்டீர்கள், மழையையும் காணமாட்டீர்கள்; ஆனாலும் நீங்களும் உங்கள் ஆடுமாடுகளும் உங்கள் மிருகஜீவன்களும் குடிக்கும்படிக்கு, இந்தப் பள்ளத்தாக்கு தண்ணீரால் நிரப்பப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

## 10 ஏசாயா 43:1–2

இப்போதும் யாக்கோபே, உன்னைச் சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே, உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது; பயப்படாதே; உன்னை மீட்டுக்கொண்டேன்; உன்னைப் பேர்சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன். நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன் மேல் புரளுவதில்லை; நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய்; அக்கினிஜ்வாலை உன்பேரில் பற்றாது.

## 11 சங்கீதம் 32:8

நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.

**12 எரேமியா 29:11**

நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே.

**13 சங்கீதம் 22:24**

உபத்திரவப்பட்டவனுடைய உபத்திரவத்தை அவர் அற்பமாயெண்ணாமலும் அருவருக்காமலும், தம்முடைய முகத்தை அவனுக்கு மறைக்காமலுமிருந்து, தம்மை நோக்கி அவன் கூப்பிடுகையில் அவனைக் கேட்டருளினார்.

**14 எபிரெயர் 4:16**

ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.

**15 ஏசாயா 40:29–31**

சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப் பண்ணுகிறார். இளைஞர் இளைப்படைந்து சோர்ந்துபோவார்கள், வாலிபரும் இடறிவிழுவார்கள். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள்.

**16 யோவான் 14:27**

சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக.

## 17 யோவேல் 2:25-26
நான் உங்களிடத்தில் அனுப்பின என் பெரிய சேனையாகிய வெட்டுக்கிளிகளும், பச்சைக்கிளிகளும், முசுக்கட்டைப் பூச்சிகளும், பச்சைப் புழுக்களும் பட்சித்த வருஷங்களின் விளைவை உங்களுக்குத் திரும்ப அளிப்பேன். நீங்கள் சம்பூரணமாகச் சாப்பிட்டு, திருப்தியடைந்து, உங்களை அதிசயமாய் நடத்திவந்த உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள்; என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை.

## 18 யோவான் 3:16
தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.

## 19 சங்கீதம் 66:18
என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார்.

## 20 1 யோவான் 5:11-12
தேவன் நமக்கு நித்தியஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம். குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்.

## 21 ஏசாயா 59:2
உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும், உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே, அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது.

**22** **2 கொரிந்தியர் 5:17**

இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.

**23** **யோவான் 16:24**

இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்.

**24** **எரேமியா 33:3**

என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்.

**25** **யாக்கோபு 4:3**

நீங்கள் விண்ணப்பம் பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்.

**26** **1 யோவான் 2:16**

ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்.

**27** **ஏசாயா 42:8**

நான் கர்த்தர், இது என் நாமம்; என் மகிமையை வேறொருவனுக்கும், என் துதியை விக்கிரகங்களுக்கும் கொடேன்.

**28 யோவான் 15:14**

நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்.

**29 1 யோவான் 1:9**

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

**30 சங்கீதம் 139:23–24**

தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்.

**31 சங்கீதம் 37:4–5**

கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார். உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.

**32 ரோமர் 12:1–2**

அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.

**33 ரோமர் 6:23**

பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்.

**34 1 கொரிந்தியர் 6:19**

உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?

**35 எபேசியர் 4:32**

ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.

**36 எபிரெயர் 4:12**

தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.

**37 பிலிப்பியர் 2:4–5**

அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக. கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது;

**38 ரோமர் 8:28**

அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.

## 39 எபிரெயர் 10:36-38

நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது. வருகிறவர் இன்னுங் கொஞ்சக் காலத்தில் வருவார், தாமதம் பண்ணார். விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப்போவானானால் அவன் மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார்.

## 40 ரோமர் 5:19

அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்.

## 41 எபிரெயர் 13:17

உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே.

## 42 1 கொரிந்தியர் 9:24-25

பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்.

## 43 சங்கீதம் 34:19

நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும், கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்.

**44 1 கொரிந்தியர் 6:12**

எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு,
ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது;
எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும்
நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன்.

**45 2 தீமோத்தேயு 4:2**

சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த்
திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும்
உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு,
புத்திசொல்லு.

**46 வெளிப்படுத்தல் 22:11-12**

அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும்;
அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்;
நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன்
இன்னும் பரிசுத்தமாகட்டும்.
இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி
அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது.

**47 எபேசியர் 2:8-9**

கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்;
இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு;
ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால்
உண்டானதல்ல;

**48 1 யோவான் 5:14-15**

நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர்
நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம்
கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர்
நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால்,
அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப்
பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்.

## 49 பிலிப்பியர் 4:6–7

நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்.

## 50 ஏசாயா 55:8–9

என் நினைவுகள், உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது.

## 51 1 பேதுரு 5:7–8

அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள். தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்.

## 52 ரோமர் 8:32

தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?

## 53 கொலோசெயர் 1:28

எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணுகிறோம்.

**54 அப்போஸ்தலர் 10:38**

நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும்
வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்;
தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மை
செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும்
குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்.

**55 2 தீமோத்தேயு 3:16–17**

வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால்
அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும்,
எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும்
இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து
கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப்
படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.

**56 சங்கீதம் 119:18**

உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு,
என் கண்களைத் திறந்தருளும்.

**57 சங்கீதம் 119:72**

அநேகமாயிரம் பொன் வெள்ளியைப்பார்க்கிலும்,
நீர் விளம்பின வேதமே எனக்கு நலம்.

**58 2 தீமோத்தேயு 1:7**

தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும்
அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.

**59 1 கொரிந்தியர் 10:13**

மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல்
வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை.
தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு
மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல்,
சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத்
தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.

**60 யாக்கோபு 1:5**

உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால்,
யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும்
கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன்,
அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்.

**61 அப்போஸ்தலர் 1:8**

பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள்
பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும்,
சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும்,
எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.

**62 2 கொரிந்தியர் 5:1**

பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும்,
தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு
பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்.

**63 2 கொரிந்தியர் 10:4,5**

எங்களுடைய போராயுதங்கள்
மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை
நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது.
அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற
அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும்
நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச்
சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்.

**64 1 தெசலோனிக்கேயர் 5:16–18**

எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். இடைவிடாமல்
ஜெபம்பண்ணுங்கள். எல்லாவற்றிலேயும்
ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து
இயேசுவுக்குள் உங்களைக்குறித்துத் தேவனுடைய
சித்தமாயிருக்கிறது.

**65** **ஏசாயா 53:5**

நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு,
நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்;
நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும்
ஆக்கினை அவர்மேல் வந்தது;
அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.

**66** **மாற்கு 8:35**

தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்,
என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும் தன் ஜீவனை
இழந்து போகிறவன் அதை இரட்சித்துக்கொள்ளுவான்.

**67** **1 பேதுரு 1:13**

ஆகையால், நீங்கள் உங்கள் மனதின் அரையைக்
கட்டிக்கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து;
இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படுங்
கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள்.

**68** **சங்கீதம் 27:4**

கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்;
நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும்,
அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சிசெய்யும்படியாகவும், நான்
என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில்
தங்கியிருப்பதையே நாடுவேன்.

**69** **எபேசியர் 6:12**

ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல,
துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின்
அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள
பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப்
போராட்டம் உண்டு.

**70** **1 தெசலோனிக்கேயர் 5:23**

சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக.

**71** **எபிரெயர் 10:25**

சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்.

**72** **நீதிமொழிகள் 29:1**

அடிக்கடி கடிந்துகொள்ளப்பட்டும் தன் பிடரியைக் கடினப்படுத்துகிறவன் சகாயமின்றிச் சடிதியில் நாசமடைவான்.

God's Word must be so strongly
fixed in our minds
that it becomes the dominant
influence in our thoughts,
our attitudes, and our actions.



# MEMORY VERSES

| | | | |
|---|---|---|---|
| 1 | John 1:12 | 19 | Psalm 66:18 |
| 2 | Romans 5:8 | 20 | 1 John 5:11,12 |
| 3 | Isaiah 58:11 | 21 | Isaiah 59:2 |
| 4 | Jeremiah 17:7,8 | 22 | 2 Corinthians 5:17 |
| 5 | Isaiah 45:2-4 | 23 | John 16:24 |
| 6 | Ezekiel 34:26 | 24 | Jeremiah 33:3 |
| 7 | Psalm 107:20 | 25 | James 4:3 |
| 8 | Zephaniah 3:17 | 26 | 1 John 2:16 |
| 9 | 2 Kings 3:17 | 27 | Isaiah 42:8 |
| 10 | Isaiah 43:1,2 | 28 | John 15:14 |
| 11 | Psalm 32:8 | 29 | 1 John 1:9 |
| 12 | Jeremiah 29:11 | 30 | Psalms 139:23,24 |
| 13 | Psalm 22:24 | 31 | Psalms 37:4,5 |
| 14 | Hebrews 4:16 | 32 | Romans 12:1,2 |
| 15 | Isaiah 40:29-31 | 33 | Romans 6:23 |
| 16 | John 14:27 | 34 | 1 Corinthians 6:19 |
| 17 | Joel 2:25,26 | 35 | Ephesians 4:32 |
| 18 | John 3:16 | 36 | Hebrews 4:12 |

# MEMORY VERSES

| | |
|---|---|
| 37 | Philippians 2:4,5 |
| 38 | Romans 8:28 |
| 39 | Hebrews 10:36-38 |
| 40 | Romans 5:19 |
| 41 | Hebrews 13:17 |
| 42 | 1 Corinthians 9:24,25 |
| 43 | Psalms 34:19 |
| 44 | 1 Corinthians 6:12 |
| 45 | 2 Timothy 4:2 |
| 46 | Revelation 22:11,12 |
| 47 | Ephesians 2:8,9 |
| 48 | 1 John 5:14,15 |
| 49 | Philippians 4:6,7 |
| 50 | Isaiah 55:8,9 |
| 51 | 1 Peter 5:7,8 |
| 52 | Romans 8:32 |
| 53 | Colossians 1:28 |
| 54 | Acts 10:38 |
| 55 | 2 Timothy 3:16,17 |
| 56 | Psalms 119:18 |
| 57 | Psalms 119:72 |
| 58 | 2 Timothy 1:7 |
| 59 | 1 Corinthians 10:13 |
| 60 | James 1:5 |
| 61 | Acts 1:8 |
| 62 | 2 Corinthians 5:1 |
| 63 | 2 Corinthians 10:4,5 |
| 64 | 1 Thessalonians 5:16-18 |
| 65 | Isaiah 53:5 |
| 66 | Mark 8:35 |
| 67 | 1 Peter 1:13 |
| 68 | Psalm 27:4 |
| 69 | Ephesians 6:12 |
| 70 | 1 Thessaloanians 5:23 |
| 71 | Hebrews 10:25 |
| 72 | Proverbs 29:1 |

# தேவனுடைய வார்த்தையை மனப்பாடம் செய்யச் சொல்லும் வேத வசனங்கள்

## BIBLE TELLS US TO MEMORIZE SCRIPTURE VERSES

Deuteronomy 11:18
Psalm 37:31
Psalm 40:8
Psalm 119:11,16
Proverbs 4:21
John 15:7
Colossians 3:16
2 Timothy 3:15

உபாகமம் 11:19
சங்கீதம் 37:31
சங்கீதம் 40:8
சங்கீதம் 119:11,16
நீதிமொழிகள் 4:21
யோவான் 15:7
கொலோசெயர் 3:16
2 தீமோத்தேயு 3:15

# கடைசி கால வஞ்சகத்திற்கு தப்ப...

மத்தேயு 24-ஆம் அதிகாரத்தில், கடைசிகால அடையாளங்களைக் குறித்து இயேசு சொல்லும்போது..., நான்கு முறை வஞ்சகத்தைக் குறித்து சொல்லி எச்சரித்தார் (மத்தேயு 24:4,5,11,24)!
வஞ்சகம் என்பது உண்மையில்லாத காரியத்தை உண்மை என்று நம்பி ஏமாந்து போவதாகும். 'யார் வஞ்சிக்கப்படுவார்கள்?' வேத வசனம் தெரியாதவர்கள்தான் வஞ்சகத்திற்குள் சிக்குவார்கள்!

> 2 தெசலோனிக்கேயர் 2:10, **"கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும்."**

எனவேதான், இக்கடைசி காலத்தில்... வேத வசனத்தை மனனம் செய்தல் நமக்கு மிகவும் நல்லது!



# TO ESCAPE THE LAST DAY RELIGIOUS DECEPTION...

In Matthew 24, when Jesus gave the signs for the end of the age & His second coming... He mentioned DECEPTION 4 times (Matthew 24:4,5,11,24)!
To believe what is not truth to be true is deception! Those who don't have the love for the truth are candidates for deception!

> 2 Thessalonians 2:10 **"and all the ways that wickedness deceives those who are perishing. They perish because they refused to love the truth and so be saved." (NIV)**

That is why... in this last days... It is important that we memorize the Scripture Verses!



One of the
most effective ways
of influencing
our minds is through
Memorizing
Scripture!

**To get this Scripture Memory booklet,**
**send your full Address to this**
**WhatsApp Number:**
**+91 95000 50315**